யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, மார்ச்- 2015
# Term Examination, March - 2015

| வணிகக்கல்வி - I | தரம் :- 13 (2015) | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

பகுதி I

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.
- 1 - 30 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- 31 - 50 வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடைகளைத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டின்மீது எழுதுக.

01) தேவை விருப்பம் தொடர்பான பண்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

A - பொதுத் தன்மை கொண்டவை	B - உருவாக்கப்படுபவை
C - பல்தன்மையுடையவை	D - அத்தியாவசியமானவை
E - வரையறுக்கப்படாதவை	F - வரையறுக்கப்பட்டவை

மேலுள்ளவற்றுள் விருப்பம் தொடர்பான பண்புகளை மட்டும் உள்ளடக்கிய தொகுதியைத் தெரிவு செய்க.

1) A, B, C	2) A, C, E	3) B, C, E	4) B, C, F	5) C, D, F	(.........)

02) மிகப் பொருத்தமான கூற்றினைத் தெரிவு செய்க.

1) வியாபாரம் நேர் உற்பத்தியின் விளைவாகத் தோன்றியதாகும்.
2) தனியாள் சிறப்புத் தேர்ச்சியின் பெறுபேறாக மிகை உற்பத்தி தோன்றியதாகும்.
3) மிகை உற்பத்தியின் காரணமாக வியாபாரம் தோன்றியதாகும்.
4) கைத்தொழில் புரட்சி காரணமாக சிறப்புத் தேர்ச்சி தோன்றியதாகும்.
5) சிறப்புத் தேர்ச்சி காரணமாக பாரியளவான உற்பத்திகள் தோன்றியதாகும்.	(.........)

03) பின்வரும் அட்டவணையில் X நிரலில் வணிகச் செயற்பாடுகளும் Y நிரலில் இச்செயற்பாடுகளின் விளைவுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| A - உற்பத்தி | 1. வாடிக்கையாளர்களின் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவு செய்வது |
| B - சந்தைப்படுத்தல் | 2. வெளியீட்டின் தரத்தினை மேம்படுத்துவதற்காக புதிய வெளியீட்டு முறைகளைத் தேடுதல் |
| C - நிதி | 3. வளங்களை பொருட்கள் அல்லது சேவைகளாக மாற்றுகின்ற செயன்முறை |
| D - நிர்வாகம் | 4. ஆவணங்களைப் பராமரித்தல் தொடர்பாடல் கருமங்கள் |
| E - ஆராய்ச்சி அபிவிருத்தி | 5. மூலதனத்தை பெறுதல் பயன்படுத்தல் கணக்கீட்டுச் செயற்பாடு |

X, Y நிரல்களின் இணைப்பைத் தெரிவு செய்க.

1) A - 1, B - 2, C - 5, D - 4, E - 3	2) A - 2, B - 1, C - 5, D - 4, E - 3
3) A - 3, B - 1, C - 5, D - 2, E - 4	4) A - 3, B - 1, C - 5, D - 4, E - 2
5) A - 1, B - 5, C - 4, D - 3, E - 2	(.........)



agaram.lk
Scanned with CamScanner

04) பின்வரும் அட்டவணையில் X நிரலில் பேரினச் சூழல் காரணிகளையும் Y நிரலில் ... விசைகளையும் எடுத்துக்காட்டுகின்றது.

| X | Y |
|---|---|
| A - மக்கட் சூழல்<br>B - பொருளாதாரச் சூழல்<br>C - சமூக கலாசாரச் சூழல் | 1. கல்வி மட்டம்<br>2. நம்பிக்கை<br>3. பால் அமைப்பு<br>4. மனப்பாங்கு<br>5. சம்பளமட்டம்<br>6. சேமிப்பு<br>7. இறப்பு பிறப்பு வீதம்<br>8. பண்பாடு<br>9. நுகர்வு |

X, Y நிரல்களின் பொருத்தமான இணைப்பைத் தெரிவு செய்க.

1) A - 1, 3, 5 B - 6, 8, 9 C - 2, 4, 7
2) A - 2, 3, 5 B - 6, 8, 9 C - 1, 4, 7
3) A - 1, 3, 7 B - 5, 6, 9 C - 2, 4, 8
4) A - 3, 7, 9 B - 1, 5, 6 C - 2, 4, 8
5) A - 7, 8, 9 B - 1, 2, 4 C - 3, 5, 6 (......)

05) சமூகப் பொறுப்புகளுடன் தொடர்புபட்ட வகையில் வணிகக் காரணிகள் சில கீழே தரப்படுகின்றது.

A - பசுமை உற்பத்திப் பொருள்
B - நியாயமான திரும்பல்
C - தொழிற் பாதுகாப்பு
D - பொருளாதார நன்மை
E - நியாயமான தன்மை

மேலே குறிப்பிட்டவற்றுள் உரிமையாளர்களுக்குப் பொருத்தமான வணிகத்தின் சமூகப் பொறுப்புக்கள் எவை?

1) A மட்டும்
2) B யும் D யும் E யும் மட்டும்
3) B யும் D யும் மட்டும்
4) A யும் B யும் D யும் E யும் மட்டும்
5) மேலே குறிப்பிடப்பட்டுள்ளவை அனைத்தும் (......)

agaram.lk

06) பின்வருவன நுகர்வோரின் உரிமைகளில் சிலவாகும்.

A - தெரிவு செய்யும் உரிமை
B - அடிப்படைத் தேவைக்கான உரிமை
C - பாதுகாப்புப் பெறுவதற்கான உரிமை
D - நுகர்வோர் கல்விக்கான உரிமை
E - கவனத்தை ஈர்க்கும் உரிமை
F - இழப்பீடு பெறும் உரிமை

இவற்றுள் சர்வதேச நுகர்வோர் சங்கங்களின் சம்மேளனத்தால் பிரகடனப்படுத்தப்பட்ட நுகர்வோர் உரிமைகளை மட்டும் உள்ளடக்கிய தொகுதியைத் தெரிவு செய்க.

1) A, C, E 2) B, D, F 3) B, D, E 4) C, D, E 5) D, E, F (......)

07) வரையறுக்கப்பட்ட கம்பனிகளை வகைப்படுத்தும் போது கருத்தில் கொள்ளப்படும் நியதி அல்லாதது எது?

1) பங்குதாரர்களின் எண்ணிக்கை
2) பொறுப்புக்கள்
3) மூலதன அமைப்பு முறை
4) முகாமைத்துவம்
5) நீடித்த வாழ்வு (......)

08) பின்வருவன பங்குடமை வணிகத்தின் பங்காளர்களின் உரிமைகளும் கடமைகளுமாகும்.

A - பங்குடமை நடவடிக்கைகளில் கலந்து கொள்ளல்.
B - தனிப்பட்ட இலாபம் பெறாதிருத்தல்
C - இலாபத்தில் பங்கு கொள்ளல்
D - வணிகக் கருமங்களில் ஈடுபாட்டுடன் கலந்து கொள்ளல்
E - போட்டி வணிகங்களில் ஈடுபடாதிருத்தல்
F - நட்டத்தில் பங்கு பெறல்

மேலுள்ளவற்றுள் பங்காளர்களின் கடமைகளை மட்டும் உள்ளடக்கிய தொகுதியைத் தெரிவு செய்க.

1) A, B, D, C 2) B, D, E, F 3) A, C, D, E 4) C, D, E, F 5) B, C, D, E (......)



Scanned with CamScanner

09) பொது வரையறுத்த கம்பனியொன்றின் உரிமைத்துவத்தை (Ownership) பிரதிநிதிப்படுத்துபவர்கள்
1) சாதாரண பங்குதாரர் மற்றும் முன்னுரிமை பங்குதாரர்
2) தலைவரும் இயக்குனர் சபையும்
3) சாதாரண பங்குதாரர் மற்றும் தொகுதிக் கடன்காரர்
4) முன்னுரிமை பங்குதாரர்கள்
5) சாதாரண பங்குதாரர்கள் (..........)

10) ஒரு முயற்சியாளன் வணிக நடவடிக்கைகளில் ஈடுபடத் தூண்டும் காரணி அல்லாதது எது?
1) தனது இலட்சியத்தை அடைவதற்கான தனிப்பட்ட விருப்பு
2) தன்னுடைய பயிற்சியினையும் திறனையும் மிகச் சிறப்பாக பயன்படுத்த வேண்டுமெனும் ஆவல்
3) தனது எண்ணப்படி செயல் புரிவதற்கான சுதந்திரம்
4) தனது எண்ணப்படி எந்த வகையான இடரையும் ஏற்றுக்கொள்வதற்கான விருப்பு
5) புதிய சவால்களை எதிர்கொள்ளல் (..........)

11) சிற்றளவு வணிகமொன்றின் சிறப்பியல்பாக ஏற்றுக்கொள்ள முடியாத கூற்றைத் தெரிவு செய்க.
1) பெரும்பாலும் உரிமையாளனே முகாமையாளராவார்.
2) தீர்மானமெடுத்தல் தன்னிடமுள்ள தரவுகளினடிப்படையில் மாத்திரம் இடம்பெறல்.
3) குறைந்தளவு ஊழியர் தொகையொன்று காணப்படல்.
4) பாரிய வணிகங்களுடன் ஒப்பிடும் போது இவற்றின் மூலதன இணைப்பு குறைவானதாகும்.
5) முதலீட்டுடன் ஒப்பிடும் போது கிடைக்கும் இலாபமானது தாழ்வான ஒரு மட்டத்தில் இருத்தல். (..........)

12) பின்வருவனவற்றுள் விசேட நிதி நிறுவனம் அல்லாதது எது?
1) குத்தகைக் கம்பனிகள்
2) வியாபார வங்கிகள்
3) காப்புறுதிக் கம்பனிகள்
4) பங்குத் தரகர் கம்பனிகள்
5) முதன்மைநிலை வணிகர்கள் (..........)

13) ஒரு காசோலையைக் கோடிடல் (Crosing) தொடர்பான சரியான கூற்றைத் தெரிவு செய்க.
1) காசோலையொன்றின் பொதுவான கோடிடலுக்கு இதன் முகப்பில் இரண்டு சமாந்தரமான நேர்கோடுகளை வரைதல் வேண்டும்.
2) "கைமாற்றத்தகாதது" என்ற வாசகத்தைக் கொண்டுள்ள ஒரு கோடிட்ட காசோலையை கைமாற்ற முடியாது.
3) வரையுனரால் மாத்திரமே கோடிடலை மேற்கொள்ளமுடியும்.
4) ஒரு கோடிடலை வரையுனரால் (Drawer) அல்லது வரையுணியால் (Drawee) மாத்திரமே நீக்கமுடியும்.
5) "பெறுவோன் கணக்கு மட்டும்" என்ற காசோலையானது ஒரு சிறப்புக் கோடிடலாகும். (..........)

14) காப்புறுதி ஒப்பந்தமொன்று செல்லுபடியாவதற்கு பொருத்தமற்றது பின்வருவனவற்றுள் எது?
1) சட்ட ரீதியான தொடர்பொன்றை உருவாக்கிக் கொள்ளும் எண்ணம்.
2) முன்மொழிவுகள்
3) சட்டரீதியான தன்மை
4) சேதத்தின் அளவிற்கு மட்டும் இழப்பீடு கிடைக்கப் பெறுதல்.
5) ஏற்புடைமை (..........)

15) மோட்டார் வாகனங்கள் மீது "முழுமையாகக் காப்புறுதி செய்யப்பட்டது" என எழுதப்படுவதனால் கருதப்படுவது யாது?
1) இழப்பீடு மூன்றாம் கட்சியினருக்கும் பிரயாணம் செய்யும் பிரயாணிகளுக்கும் செலுத்தப்படும் என்பது.
2) இழப்பீடு மூன்றாம் கட்சியினருக்கும் வாகனத்துக்கும் செலுத்தப்படும் என்பது.
3) இழப்பீடு மூன்றாம் கட்சியினருக்கும் வாகனத்துக்கும் பிரயாணிகளுக்கும் செலுத்தப்படும் என்பது.
4) இழப்பீடு வாகனத்தின் பிரயாணிகள் அனைவருக்கும் செலுத்தப்படும் என்பது.
5) இழப்பீடு வாகனத்துக்குத் தீயினாலும் கலவரங்களினாலும் ஏற்பட்டால் செலுத்தப்படும் என்பது. (..........)



agaram.lk
Scanned with CamScanner

16) பொருத்தமான போக்குவரத்து முறை ஒன்றைத் தெரிவு செய்வதில் வணிகரொருவர் கவ
கொள்ள வேண்டிய காரணிகளை உள்ளடக்கும் தொகுதி எது?
1) ஊடகம், வழி, சக்தி, தரிப்பிடம்
2) நிலம், நீர், காற்று, குழாய்
3) காலம், சௌகரியம், ஊடகம், கிரயம்
4) கிரயம், வேகம், பாதுகாப்பு, இயலளவு
5) ஊடகம், சக்தி, பாதுகாப்பு, வேகம்

17) புகையிரதப் போக்குவரத்தினால் ஏற்படும் ஒரு நன்மை அல்லாதது எது?
1) பெருமளவு பொருட்களையும், பயணிகளையும் ஒரேமுறையில் கொண்டு செல்லக்கூடியதாக இருத்தல்
2) தேவையான எந்த நேரத்திலும் சேவையினைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருத்தல்
3) பாதுகாப்பானதாயிருத்தல்
4) பொருட்களின் தன்மைக்கேற்ப பெட்டிகளைப் பயன்படுத்தக்கூடியதாக இருத்தல்
5) ஏனைய போக்குவரத்து முறைகளுடன் ஒப்பிடும் போது கட்டணம் குறைவாயிருத்தல் (.....)

18) தொடர்பாடலின் அடிப்படை அம்சங்கள் தொடர்பாடல் முறையின் சிறப்பியல்புகள் என்பவற்று
கீழே தரப்பட்டுள்ளன.

A - கிரயம் B - செய்தி C - பூரணத்துவம்

D - தெளிவு E - வேகம் F - துலங்கள்

மேலே குறிப்பிடப்பட்டவற்றுள் எது தொடர்பாடல் முறையின் சிறப்பியல்புகளைக் குறித்து நிற்கின்றது
1) A, C, E 2) A, D, F 3) B, C, F 4) B, C, E 5) C, E, F (.....)

19) பின்வரும் அட்டவணையில் X நிரலானது முகவர்களின் வகைகளையும் Y நிரலானது அவர்களுட
தொடர்புபட்ட காரணிகளையும் எடுத்துக்காட்டுகின்றது.

| X | Y |
|---|---|
| A - தரகு முகவர் | 1. தனது சேவைக்காக இரு பகுதியிடமிருந்தும் தரகுப் பணத்தினை பெறுபவர். |
| B - ஏலவர் | 2. தான நிறைவேற்றும் பணிகள் தொடர்பாக கூடுதலான அதிகார உடையவர். |
| C - காரணிகர் | 3. முதல்வருக்கு நன்மை பயக்கும் வகையில் கொள்வனவு விற்பனையில் ஈடுபடல். |
| D - தரகர் | 4. விற்பனையாளரின் முகவராகவும் அத்துடன் வாங்குபவர் முகவராகவும் செயற்படல் |

X, Y நிரல்களின் பொருத்தமான இணைப்பைத் தெரிவு செய்க.
1) A - 4, B - 3, C - 2, D - 1
2) A - 3, B - 2, C - 1, D - 4
3) A - 3, B - 4, C - 2, D - 1
4) A - 2, B - 3, C - 4, D - 1
5) A - 3, B - 4, C - 1, D - 2
(.....)

20) உற்பத்தியாளர் இடைநடுவர்களைப் பயன்படுத்துவதனால் ஏற்படும் ஒரு நன்மை அல்லாதது எது?
1) பொருட்களை விநியோகிப்பது இலகுவாக அமைதல்
2) தமது பொருட்களை அறிமுகப்படுத்துவது இலகுவாக அமைதல்
3) தமது உற்பத்திக் கருமங்கள் இலகுவாதல்
4) தமது உற்பத்திப் பொருட்களின் விலை மட்டம் உயர்வடையக் கூடியதாய் இருத்தல்
5) சந்தைத் தகவல்களை உரிய தரப்பினருக்கு இலகுவாக பெற்றுக்கொள்ள முடியுமாயிருத்தல்
(.....)

21) சர்வதேச வியாபாரத்தில் வியாபாரத் தடைகளை ஆகக் குறைந்தளவாக்குவதற்கு உதவும் அமைப்பு
எது?
1) உலக வங்கி
2) சர்வதேச நாணய நிதியம்
3) ஆசிய அபிவிருத்தி வங்கி
4) ஐக்கிய நாடுகள் அமைப்பு
5) உலக வர்த்தக அமைப்பு
(.....)



agaram.lk
Scanned with CamScanner

) நிறுவனமொன்றின் இலக்குகளை அடைதல் எதன் மூலம் காட்டப்படுகின்றது
1) திட்டமிடல்
2) ஒழுங்கமைத்தல்
3) நெறிப்படுத்தல்
4) கட்டுப்படுத்தல்
5) முகாமைத்துவச் செயற்பாடு

(.........)

3) பின்வரும் அட்டவணையானது முகாமையின் வகிபாகங்களையும் அவற்றுடன் தொடர்புடைய தொழிற்பாடுகளையும் தருகின்றது.

| வகிபாகங்களின் வகைகள் | வகிபாகங்களின் தொழிற்பாடுகள் |
|---|---|
| A - நபர்களுக்கிடையிலான வகிபாகம்<br>B - தகவலளிப்பு வகிபாகம்<br>C - தீர்மானமெடுத்தல் வகிபாகம் | 1. கண்காணிப்பாளர்<br>2. பேச்சுவார்த்தை நடத்துபவர்<br>3. உத்தியோகபூர்வ பேச்சாளர்<br>4. இணைப்பு அதிகாரி<br>5. பெயரளவுத் தலைவர்<br>6. வள ஒதுக்கீட்டாளர் |

முகாமையின் வகிபாகங்களுக்கும் தொழிற்பாடுகளுக்கும் பொருத்தமான இணைப்பைத் தருக.
1) A - 4, 5 B - 1, 6 C - 2, 3
2) A - 4, 5 B - 1, 3 C - 2, 6
3) A - 2, 4 B - 3, 5 C - 1, 6
4) A - 5, 6 B - 3, 4 C - 1, 2
5) A - 1, 2 B - 3, 4 C - 5, 6

(.........)

24) பின்வருவனவற்றுள் எது திணைக்களப்படுத்தலின் (Departmentalization) பிரதான அடிப்படை அன்று.
1) உற்பத்திப் பொருள் அடிப்படை
2) தொழிற்பாட்டு அடிப்படை
3) பூகோள ரீதியான அடிப்படை
4) ஊழியர் அடிப்படை
5) உற்பத்திச் செய்முறை அடிப்படை

(.........)

25) உருவாக்கப்பட்ட நியமங்களுக்கு இணங்க முடிவுப் பொருட்களைச் சோதித்தல், பரீட்சித்தல் செயன்முறையானது எவ்வாறு குறிப்பிடப்படுகின்றது?
1) இருப்புக் கட்டுப்பாடு
2) உற்பத்திக் கட்டுப்பாடு
3) தரக் கட்டுப்பாடு
4) உற்பத்திப் பொருள் அபிவிருத்தி
5) மாதிரியை பரீட்சித்தல்

(.........)

26) சந்தைப்படுத்தலுடன் தொடர்பான வகையில் நிகழ்வும் அனுபவமும் செயற்பாட்டிற்கான ஒரு உதாரணம்
1) அனுசரணையுடனான வேலைத்திட்டங்கள்
2) நேரடி விற்பனை
3) வியாபார சந்தைகளும் பொருட்காட்சிகளும்
4) சுவரொட்டிகளும் துண்டுப்பிரசுரங்களும்
5) போட்டிகளும் லொத்தர்களும்

(.........)

27) பின்வருவனவற்றுள் நேரில் நிதிமூலம் எது?
1) சாதாரண பங்கு வழங்குதல்
2) தொகுதிக்கடன் வழங்குதல்
3) முன்னுரிமைப் பங்கு வழங்குதல்
4) தேய்வு ஏற்பாடுகள்
5) வணிகப் பத்திரம் வழங்குதல்

(.........)

28) பின்வருவன நிதி முகாமைத்துவத் தீர்மானங்கள் சிலவாகும்.

A - சரக்கிருப்புக்கள்
B - கடன் கொடுத்தோர்
C - வணிக விரிவாக்கம்
D - பங்கு மூலதனம்
E - நிலையான சொத்துக்கள்
F - பங்கு லாபம்

இவற்றுள் நிதியிடல் தீர்மானங்களை மட்டும் உள்ளடக்கிய தொகுதியை தெரிவு செய்க.
1) A, C, E 2) D, E, F 3) B, D, F 4) D, E, F 5) B, C, F (.........)



agaram.lk
Scanned with CamScanner

29) உயர் மூலதன இணைப்பு கட்டமைப்பு என்பதனாற் கருதப்படுவது.

1) கடன் மூலதனமானது உரிமை மூலதனத்தைவிட உயர்வானது.
2) உரிமை மூலதனமானது கடன் மூலதனத்தைவிட உயர்வானது
3) நிறுத்தி வைக்கப்பட்ட உழைப்புக்கள் பங்கு மூலதனத்தைவிட உயர்வானது.
4) நீண்ட தவணை மூலதனம் குறைந்த தவணை மூலதனத்தைவிட உயர்வானது.
5) நிலையான மூலதனம் தொழிற்படு மூலதனத்தைவிட உயர்வானது.

( ... )

30) மனித வளங்களுக்கான தேவையை எதிர்வு கூறுவதில் கருத்திற் கொள்ள வேண்டிய காரணிக... மட்டும் உள்ளடக்கியுள்ள தொகுதியைத் தெரிவு செய்க.

1) வேலைக் குறித்துரைத்தல், வேலை விவரணம், இளைப்பாறல், உற்பத்திமுறை
2) இலக்குகளும் திட்டங்களும், உற்பத்திப் பொருளுக்கான கேள்வி, இளைப்பாறல், உற்பத்திமுறை
3) ஆட்சேர்ப்பும் தெரிவுசெய்தலும், கூலிக்கமர்த்தல், விலகல், இளைப்பாறல்
4) வேலைக் குறித்துரைத்தல், வேலை விவரணம், ஆட்சேர்ப்பும் தெரிவுசெய்தலும், கூலிக்கமர்த்தல்
5) உற்பத்திமுறை, உற்பத்திப் பொருளுக்கான கேள்வி, கூலிக்கமர்த்தல், பயிற்சியும் அபிவிருத்தியும்

( ... )

❖ **31 - 40 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிப்பதற்காகப் பொருத்தமான சொற்களைக் கொண்டு வெற்றிடங்களை நிரப்புக.**

31) வேறு பொருட்களை உற்பத்தி செய்வதற்கு பயன்படுத்தப்படும் பொருட்கள் .................................. ஆகக் கருதப்படுவதுடன் இன்னொன்றுக்காக ஒரு பொருளை அல்லது சேவையை வர்த்தக... செய்வது .................................................................................................. எனப்படும்.

32) அ) அரசாங்கத்தின் நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கு பொறுப்பாக உள்ள அமைப்பு .................................................................................................. ஆகும்.

ஆ) இலங்கையில் அரச வருமானம் திரட்டலில் ஈடுபடும் நிறுவனங்கள் இரண்டாக .................................., .................................. ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

33) அ) .................................. மற்றும் .................................. என்பன இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தியில் உயர்ந்த பங்களிப்பை வழங்கும் துறைகளாகும்.

ஆ) சிறிய வணிகங்களுக்கு தொழில்நுட்ப சேவைகளை வழங்கும் நிறுவனங்களாக .................................., .................................. ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

34) அ) நிதிச் சந்தையில் நிதிக் கருவிகள் மூலம் கடன் திரட்டும் நிறுவனங்களின் நிதிப் பலம் தொடர்பான மதிப்பீட்டை முன்வைப்பதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பு .................................. .................................................................................................. ஆகும்.

ஆ) இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற விசேட வங்கி இரண்டாக .................................. .................................. ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

35) அ) குத்தகை உடன்படிக்கையின் போது பராமரித்தல், சேவை போன்றவற்றின் பொறுப்புக்கள் குத்தகைக் கம்பனிகளாலேயே ஏற்றுக் கொள்ளப்படல் .................................. என அழைக்கப்படும்.

ஆ) கணினியிலிருந்து கணினிக்கு இணைய வலைப்பின்னலினூடாக செய்திகளைப் பரிமாறிக் கொள்ளும் ஒரு முறைமை .................................. என அழைக்கப்படும்.



agaram.lk

Scanned with CamScanner

36) அ) கட்டுப்படுத்தல் செயன்முறையில் பெறுபேறுகளை அளவிடுவதற்கு உருவாக்கப்பட வேண்டியது ........................................................................................................................ ஆகும்.

ஆ) அமைப்பின் அனைத்து ஊழியர்களும் தொடர்புறும் வகையில் அதிகாரம் தொடர்ச்சியாக பாய்ந்து செல்லும் முறை ........................................................................ எனப்படும்.

37) அ) நிறுவனத்தின் ஊழியர்களை ஊக்குவிப்பதற்கு ........................................................................ ........................................................................ இருமுறைகள் காணப்படுகின்றன.

ஆ) சரக்கிருப்பின் பெறுமதியையும் எண்ணிக்கையையும் கருத்திற் கொள்ளும் சரக்கிருப்புக் கட்டுப்பாட்டு முறைமை ........................................................................ ஆகும்.

38) அ) மூலப்பொருள் கட்டளை இடப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து களஞ்சிய சாலைக்குப் பொருள் கிடைக்கப்பெறும் வரையில் உள்ள காலம் ................................................ என அழைக்கப்படும்.

ஆ) ................................................ மற்றும் ................................................ என்பன விலையிடலின் போது கவனத்திற் கொள்ளப்படும் பிரதான காரணிகள் ஆகும்.

39) அ) ................................................ மற்றும் ................................................ என்பன எதிர்பார்க்கப்படும் உற்பத்திகளில் கவனம் செலுத்தப்பட வேண்டிய பண்புகளாகும்.

ஆ) நிறுவனமொன்றின் நிதி முகாமைத்துவத்தின் இரண்டு நோக்கங்கள் ................................................ ........................................................................ என்பனவாகும்.

40) அ) கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்காகவும் முறைப்படுத்துவதற்காகவும் உருவாக்கப்பட்ட நிறுவகம் ................................................ ........................................................................ என அழைக்கப்படும்.

ஆ) நிறுவனமொன்றின் வேலைக்குப் பொருத்தமான விண்ணப்பதாரிகளை கவருகின்ற செயன்முறை ........................................................................ என அழைக்கப்படும்.

agaram.lk


❖ 41 - 50 வரையிலுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடைகளை எழுதுக.

41) வணிகமொன்றில் அக்கறை செலுத்தும் நான்கு பிரிவினர்களைப் பெயரிடுக.

1) ................................................ 2) ................................................

3) ................................................ 4) ................................................

42) வரியின் பிரதான வகைகள் தொடர்பாக காட்டப்பட்டுள்ள பின்வரும் வரைபடத்தைப் பூர்த்தி செய்க.



43) நுகர்வோரின் பொறுப்புக்கள் நான்கினை எழுதுக.

1) ..............................

2) ..............................

3) ..............................

4) ..............................

44) அ) இலங்கைக்கு வெளியே வணிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இலங்கை... கூட்டிணைக்கப்பட்ட கம்பனி .............................. என அழைக்கப்...

ஆ) பங்குடமை வணிகங்கள் தொடர்பாக இலங்கையில் தற்போது காணப்படும் சட்... .............................. ஆகும்.

45) சிற்றளவு வணிகங்களின் தோல்வியில் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணிகள் நான்கினை எழுதுக.

1) .............................. 2) ..............................

3) .............................. 4) ..............................

46) கடனட்டையின் முன்பக்கத்தில் காட்டப்பட்டுள்ள நான்கு விடயங்களை எழுதுக.

1) .............................. 2) ..............................

3) .............................. 4) ..............................

47) அ) ஆயுள் காப்புறுதி தொடர்பாக உரித்தற்ற காப்புறுதிக் கொள்கைகள் இரண்டினைப் பெயரிடுக.

1) .............................. 2) ..............................

ஆ) சர்வதேச வியாபார வளர்ச்சிக்கு இயற்கையான தடைகள் இரண்டினை எழுதுக.

1) .............................. 2) ..............................

48) அ) நிறுவனமொன்றில் முகாமையாளரொருவருக்குக் கிடைக்கின்ற சட்ட ரீதியான ப... .............................. எனப்படும்.

ஆ) ஒரேவகையான பொருளொன்று பேரளவு அடிப்படையில் தொடர்ச்சியாக ஒரு உற்பத்... வரிசையில் உற்பத்தி செய்யும் முறை எது?

..............................

49) அ) சந்தைப்படுத்தல் எண்ணக்கருவில் முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டியவையா... .............................. மற்றும் .............................. என்பவற்றைக் குறிப்பிடலாம்.

ஆ) கொழும்பு பங்குபரிவர்த்தனை நிலையத்தில் வரையறுத்த பொதுக்கம்பனி ஒன்றிற்கா... பட்டியற்படுத்தல் முறைகள் இரண்டாக .............................. .............................., ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

50) குறித்தவொரு வேலையின் பணிகளை விபரிக்கும் கூற்று .............................. எனவும் வேலை செய்ய வேண்டியவருக்கு இருக்கவேண்டிய தகைமைகளை விபரிப்ப... .............................. எனவும் அழைக்கப்படும்.

agaram.lk



Scanned with CamScanner

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, மார்ச்- 2015
## Term Examination, March - 2015

| வணிகக்கல்வி - II | தரம் :- 13 (2015) | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

### பகுதி I

❖ ஒவ்வொரு பகுதியில் இருந்தும் ஆகக்குறைந்தது இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து (05) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1) 1) வியாபாரத்தின் வளர்ச்சிக்குப் பல்வேறு வணிகச் சேவைகள் உதவுகின்றன. அவற்றைப் பெயரிட்டு, அவை எவ்வாறு வியாபாரத்தை நடாத்திச் செல்ல அவசியமாகின்றது என சுருக்கமாக விளக்குக.
(04 புள்ளிகள்)

2) அ) ஏன் ஒரு நாட்டிற்கு உற்பத்தித்திறன் (Productivity) முக்கியமானது என்பதற்கான நான்கு விடயங்களை எழுதுக.

ஆ) விருப்பம் மற்றும் கேள்வி என்பவற்றுக்கு இடையே காணப்படும் தொடர்பினை சுருக்கமாக விளக்குக.
(04 புள்ளிகள்)

3) அ) வணிகச் சூழல்களை கற்பதன் மூலம் வணிகரொருவருக்கு கிடைக்கக் கூடிய நன்மைகளைக் குறிப்பிடுக.

ஆ) பொருட்களுடன் ஒப்பிடும்போது சேவையொன்றின் பிரதான சிறப்பியல்புகளைக் குறிப்பிட்டு விளக்குக.
(04 புள்ளிகள்)

4) வாடிக்கையாளர்கள், ஊழியர்கள், உரிமையாளர் மற்றும் சமூகம் ஆகியோருடனான நிறுவனத்தினது தொடர்புக்கு சமூகப் பொறுப்பு என்ற எண்ணக்கருவை எவ்வாறு பிரயோகிக்க முடியும் என்பதனை விளக்குக.
(04 புள்ளிகள்)

5) அ) அரசாங்கமொன்றின் நான்கு பொருளாதார நோக்கங்களைக் குறிப்பிடுக.

ஆ) அரசாங்கமொன்றின் பொருளாதார நோக்கங்களை அடைவதற்கு, வணிகம் பங்களிப்புச் செய்யும் நான்கு வழிகளைக் குறிப்பிடுக.
(04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

2) 1) அ) இலங்கையின் நாணயக் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை மத்திய வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படும் பண்புசார் கட்டுப்பாட்டு முறைகளை விளக்குக.

ஆ) நுகர்வோருக்கும், வணிகர்களுக்கும் நுகர்வோர் பாதுகாப்பினால் கிடைக்கும் நன்மைகளைத் தனித்தனியாக குறிப்பிடுக.
(04 புள்ளிகள்)

2) அ) கூட்டுறவுச் சங்கமொன்றை பதிவு செய்யும்போது கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் யாவை?

ஆ) விபுசன், அஜித், பிரகதி ஆகியோர் பங்குடைமை ஒன்றைக் கொண்டு நடத்துகின்றனர். அவர்களிடம் எழுத்துமூலமான பங்குடமை ஒப்பந்தம் இல்லை பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக அவர்களுக்கிடையே முரண்பாடுகள் காணப்படுகின்றது.

1. இலாபநட்ட விகிதம்
2. ஈடுபடுத்தப்பட்ட மூலதனத்துக்கான வட்டி
3. விபுசன், பிரகதி இயங்கும் பங்காளராகக் காணப்படுவதனால் அவர்கள் சம்பளத்தைக் கோருகின்றனர்.
4. விபுசன் தன்னால் வழங்கப்பட்ட கடனுக்கு வட்டியை கோருகின்றார். 1890 ஆம் ஆண்டின் பங்குடமை கட்டளைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின்படி மேற்கூறப்பட்ட பிரச்சினைகளை அவர்கள் எவ்வாறு தீர்த்துக்கொள்ள முடியும் என்பதைத் தனித்தனியாக விளக்குக.

(04 புள்ளிகள்)



agaram.lk
Scanned with CamScanner

3) அ) பொது வரையறுத்த கம்பனியொன்றின் வரையறுக்கப்பட்ட பொறுப்பு, நீண்ட ...
என்பவற்றின் மூலம் கருதப்படுவது யாது? (04 புள்ளி...

ஆ) பட்டியல்படுத்தப்பட்ட கம்பனியையும் பட்டியல்படுத்தப்படாத கம்பனியையும் வே...
அடையாளப்படுத்தப்படும் என்பதை உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளி...

4) அ) அரச கூட்டுத்தாபனங்களுக்கும் அரச திணைக்களங்களுக்கும் இடையிலான இர...
ஒற்றுமைகளையும் இரண்டு வேற்றுமைகளையும் குறிப்பிடுக.

ஆ) முயற்சியாண்மைக்கும் பொருளாதார அபிவிருத்திக்குமிடையில் காணப்படுகின்ற தொடர்பு...
சுருக்கமாக விளக்குக. (04 புள்ளி...

5) அ) "ஆக்கத்திறன்" மற்றும் "புத்தாக்கம்" என்பவற்றுக்கு இடையே காணப்படும் தொடர்பு...
சுருக்கமாக விளக்குக.

ஆ) காசோலையில் "புறக்குறிப்பிடுதல்" என்பதனால் கருதப்படுவது யாது? இதன் நோக்க...
விளக்குக. (04 புள்ளி...
(மொத்தம் - 20 புள்ளி...

3) 1) அ) நடைமுறைக்கணக்கொன்றினை ஆரம்பிக்கும் புதிய நபரொருவருக்கு காசோலையொன்றி...
எழுதுவது தொடர்பாக வழங்கும் ஆலோசனைகளைச் சுருக்கமாக விபரிக்குக.

ஆ) தன்னியக்க ரெலர் பொறி (ATM) அட்டைகளைப் பயன்படுத்தும் வாடிக்கையாளருக்...
கிடைக்கும் நான்கு நன்மைகளை எழுதுக. (04 புள்ளிக...

2) அ) தொலைபேசி வங்கிச்சேவைக்கும் ஒன்லைன் (Online Banking) வங்கிச் சேவைக்...
இடையிலான வேறுபாடுகளைச் சுருக்கமாக விளக்குக.

ஆ) சேமிப்புக் கணக்கையும், நடைமுறைக்கணக்கையும் ஒப்பிட்டு வேறுபடுத்துக. (04 புள்ளிக...

3) அ) பங்குச் சந்தையில் இடைநடுவர்களாக தொழிற்படும் பங்குத்தரகர் கம்பனியின...
நிறைவேற்றப்படும் சேவைகள் யாவை?

ஆ) வியாபார வங்கியினால் வணிகர்களுக்கு வழங்கப்படும் சேவைகளைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

4) பின்வரும் எண்ணக்கருச் சோடிகளுக்கிடையிலான ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்க.

அ) தனியுடைமை வணிகமும் பங்குடைமை வணிகமும்

ஆ) சாதாரண பங்குகளும் முன்னுரிமைப் பங்குகளும் (04 புள்ளிகள்)

5) அ) வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு (NRFC) என்றால் என்ன? இக்கணக்க...
வைத்திருப்பவர்களுக்குக் கிடைக்கும் இரு நன்மைகளைக் குறிப்பிடுக.

ஆ) சிறந்த பணத்தில் காணப்பட வேண்டிய பண்புகள் நான்கினைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)
(மொத்தம் 20 புள்ளிகள்)

4) 1) வணிகங்களின் தொடர்ச்சியான செயற்பாட்டிற்கு காப்புறுதி காரணமாய் அமைந்துள்ளதை...
காணமுடிகிறது.

அ) காப்புறுதி "அபாயங்களை பரவலாக்கல்" என்பதனால் கருதப்படுவது யாது?

ஆ) காப்புறுதி செய்யக்கூடிய நட்ட அச்சங்களுக்கு காணப்பட வேண்டிய பண்புகள் யாவை? (04 புள்ளிகள்)

2) அ) வணிகச் செயற்பாடுகள் தொடர்பில் போக்குவரத்தின் அவசியத்தையும் முக்கியத்துவத்தையு...
விளக்குக.

ஆ) மோட்டார் வாகனத்தின் குழாய் மூலம் வெளியேறும் காபன்களை குறைப்பதற்கு பெற்று...
கொள்ளும் சான்றிதழ் எது? (04 புள்ளிகள்)

3) அ) வாய்மொழி மூலத்தொடர்பாடலைவிட எழுத்து மூலமான தொடர்பாடல் முக்கியத்துவம் பெறு...
சந்தர்ப்பங்கள் எவை?

ஆ) வினைத்திறனான தொடர்பாடலுக்கு தடையாக உள்ள காரணங்கள் எவையென விபரிக்குக (04 புள்ளிகள்)



agaram.lk
Scanned with CamScanner

4) இலங்கையில் சிறப்புச்சந்தை ஆனது வளர்ச்சியும், விருத்தியும் பெற்றிருந்த போதிலும் சிறிய அளவான சில்லறை வியாபாரங்கள் குறைந்து விடவில்லை.

அ) நடைமுறையில் காணப்படும் சில்லறை வியாபாரங்களின் நவீன போக்குகள் நான்கினை எழுதுக.

ஆ) சில்லறை வியாபாரியினால் நுகர்வோருக்கு கிடைக்கும் நன்மைகள் யாவை? (04 புள்ளிகள்)

5) அ) இலத்திரனியல் வர்த்தகத்தின் (E. Commerce) விரிவாக்கத்தின் மூலம் வாடிக்கையாளர்களுக்கு கிடைக்கும் அனுகூலங்களைக் குறிப்பிடுக.

ஆ) வெளிநாட்டு வியாபாரம் தொடர்பாக பயன்படுத்தப்படும் பின்வரும் ஆவணங்கள் மூலம் நீர் என்ன விளங்கிக்கொள்கின்றீர் என்பதை விளக்குக.

1) கப்பல்தளப்பத்திரம் 2) ஏற்றுமதிக்குறிப்பு (04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

## பகுதி II

5) 1) அ) "கற்றலை இலகுபடுத்துவதற்காக முகாமைத்துவ செயன்முறைகள் நான்கு தொழிற்பாடுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் நடைமுறையில் இத்தொழிற்பாடுகள் பரஸ்பரம் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை ஆகும். "இக்கூற்றை ஆராய்க.

ஆ) திட்டமிடல் செயன்முறையின் பிரதானமான தொழிற்பாடுகளைப் பெயரிடுக. (04 புள்ளிகள்)

2) வெற்றிகரமான முகாமைத்துவத்திற்கு வளங்களை முறையாக ஒழுங்கமைத்தல் மிகவும் முக்கியமான ஒரு முகாமைத்துவ செயற்பாடாகும்.

அ) ஒழுங்கமைத்தல் என்றால் என்ன?

ஆ) நிறுவனமொன்றினது வெற்றிக்கு ஒழுங்கமைத்தல் முக்கியத்துவமுடையதாக இருப்பதற்கான காரணங்களைத் தருக. (04 புள்ளிகள்)

3) நெறிப்படுத்தல் செயல் முறையின் பிரதான கருமங்களில் ஒன்று தலைமைத்துவம் ஆகும்.

அ) நிறுவகமொன்றுக்குச் சிறந்த தலைமைத்துவம் ஏன் அவசியமாகும்?

ஆ) தலைவரின் நடத்தைப் பாங்கின் அடிப்படையில் தலைமைத்துவப் பாங்குகள் (Leadership style) இரண்டும் எவை? (04 புள்ளிகள்)

4) ஊழியர் ஊக்குவித்தல் என்பதனால் கருதப்படுவது யாது? ஒரு நிறுவனம் ஊழியர் ஊக்குவித்தல் மூலம் எத்தகைய நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்? (04 புள்ளிகள்)

agaram.lk

5) பின்வரும் எண்ணக்கருச் சோடிகளுக்கிடையிலான வேறுபாடுகளை உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக.

அ) முறைசார்ந்த தொடர்பாடலும் முறைசாராத் தொடர்பாடலும்

ஆ) நடைமுறைக்கட்டுப்பாடும் (Cocurrent control) பின்னூட்டக் கட்டுப்பாடும் (Feed back control) (04 புள்ளிகள்)

6) 1) உற்பத்தி நிறுவனமொன்று தனது தொழிற்சாலைக்குப் பொருத்தமான இட அமைவினைத் தெரிவு செய்தல் முக்கியமாகும். அதே போன்று இட அமைவுத் திட்டமிடலும் முக்கியமானதாகும்.

அ) இடஅமைவுத் திட்டமிடல் முக்கியம் என்பதற்கான காரணங்களை விளக்குக.

ஆ) இடஅமைவுத் திட்டமிடல் ஒழுங்கமைப்பு சரியாகக் காணப்படாவிடின் உற்பத்தி நிறுவனங்கள் எதிர்கொள்ளும் தடைகளைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

2) அ) இருப்புக் கட்டுப்பாடு உற்பத்தி நிறுவனமொன்றிற்கு ஏன் முக்கியமானதென விளக்குக.

ஆ) பின்வரும் எண்ணக்கருக்களை விளக்குக.

1. மொத்தத்தர முகாமைத்துவம் (TQM)
2. சிக்கனக் கட்டளைத் தொகை (EOQ) (04 புள்ளிகள்)

3) அ) நிறுவனங்கள் உற்பத்தித்திறனை விருத்தி செய்துகொள்வதற்கு நவீன தொழில்நுட்ப முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதன் மூலம் கிடைக்கும் நன்மைகள் யாவை?

ஆ) நிறுவனங்கள் பயன்படுத்தும் நவீன தொழில்நுட்ப வகைகள் யாவை? (04 புள்ளிகள்)



Scanned with CamScanner

4) உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திப் பொருட்களை போட்டியாளர்களுடைய உற்ப... பொருட்களில் இருந்து நுகர்வோர் வேறுபடுத்தி இனங்காண்பதற்காக சின்னங்க... பயன்படுத்துகின்றார்கள்.

அ) சின்னமொன்றினால் உற்பத்தியாளருக்கு கிடைக்கும் நன்மைகளை விளக்குக.

ஆ) சின்னங்களை இடுவதனால் நுகர்வோருக்குக் கிடைக்கும் நன்மைகள் யாவை? (04 புள்ளிகள்)

5) வாடிக்கையாளர்களுக்கு, மிகவும் உயர்வான பெறுமதியை வழங்குவதற்காக, சந்தைப்படுத்து... தமது உற்பத்திப் பொருட்களை வேறுபட்ட மட்டங்களில் வழங்குகின்றார்கள். உற்பத்திப் பொ... மட்டங்களை வரிசைக்கிரமமாகக் குறிப்பிடுவதுடன் அவை ஒவ்வொன்றையும் தனித்தனி... விளக்குக.

(04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

7) 1) பின்வரும் சந்தைப்படுத்தல் சார்பான எண்ணக்கருக்களை விளக்குக.

அ) பெறுமதியும் (Value) திருப்தியும்

ஆ) பரிமாற்றமும் கொடுக்கல் வாங்கல்களும் (04 புள்ளிகள்)

2) இன்று ஒரு உற்பத்திப் பொருளிற்கான மவுசு அப்பொருளுக்கான பொதியாகும். பொதி... இணைந்ததாகக் காணப்படும் சுட்டுத்துண்டிடல் ஒரு கட்டாயச் சட்டத் தேவையாகவும் உள்ளது.

அ) பொதியிடலினால் கிடைக்கப் பெறும் அனுகூலங்களை விளக்குக.

ஆ) சுட்டுத்துண்டில் பொருள் பாவனையாளருக்கு வழங்கப்படும் தகவல்கள் நான்கு குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

3) அ) நிறுவனமொன்றின் உற்பத்திப் பொருட்களுக்கான விநியோக வழிமுறைகளைத் தீர்மானிக்கும் போது சந்தைப்படுத்துனர் ஒருவரால் கவனத்தில் கொள்ள வேண்டிய நான்கு விடயங்களை எழுதுக.

ஆ) தொடர்புச் சந்தைப்படுத்தலின் (Relationship Marketing) நான்கு பிரதான பகுதிகளை குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

4) அ) கட்டுப்படுத்தும் செயன்முறையிலான படிகளைக் குறிப்பிடுக.

ஆ) இருப்புக் கட்டுப்பாட்டு முறைகள் நான்கினை எழுதுக. (04 புள்ளிகள்)

5) அ) உரிமை நிதியளிப்புக்கும் (Equity Financing) கடன் நிதியளிப்புக்கும் (Dbt Financing) இடையிலான வேறுபாடுகளை உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக.

ஆ) கொழும்புப் பங்குச்சந்தையில் பரிமாற்றம் செய்யப்படும் கருவிகளையும் பெயரிடுக.

(04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

8) 1) பின்வரும் எண்ணகருச் சோடிகளுக்கிடையிலான வேறுபாடுகளை விளக்குக.

அ) முதலாந்தர பங்குச்சந்தையும் இரண்டாம் தர பங்குச் சந்தையும்

ஆ) ஆரம்ப பங்கு வழங்கலும் பருவ முதிர்வுப் பொதுப் பங்கு வழங்கலும் (04 புள்ளிகள்)

2) அ) மத்திய வைப்பகமுறைமையின் (CDS) கருமங்களை விபரிக்குக.

ஆ) ஒரு முதலீட்டாளருக்கு ஏன் பங்குச் சந்தையின் விலைச்சுட்டிகளை (Share price Index) மதிப்பிடுவது முக்கியமானதென விளக்குக.

(04 புள்ளிகள்)

3) அ) காசுப்பாதீடு (Cash budget) என்பதாற் கருதப்படுவது யாது?

ஆ) ஒரு வணிகத்தை முகாமை செய்வதற்குக் காசுப்பாதீடு ஏன் தனிச்சிறப்பு வாய்ந்தது என்பதைச் சுருக்கமாக விளக்குக.

(04 புள்ளிகள்)

4) அ) வணிக நிறுவனமொன்று நிதித்தேவையினை நிறைவு செய்து கொள்ளும் போது கவன... செலுத்த வேண்டிய விடயங்கள் யாவை?

ஆ) மனித வளத்துக்கு மட்டும் உரித்தான சிறப்புக்கள் நான்கைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

5) வெளியிலிருந்து ஆட்சேர்த்தலானது உள்ளிருந்து ஆட்சேர்த்தலினைவிட முக்கியத்துவ... உடையதாகவும் நிறுவனத்திற்கு நன்மை பயக்கக்கூடியதாகவும் காணப்படுவதனை உணர... கூடியதாக உள்ளது.

அ) வெளியக ஆட்சேர்ப்பு பிரசித்தம் செய்யும் முறைகளைப் பெயரிடுக.

ஆ) வெளியக ஆட்சேர்ப்பின் நன்மைகளை விளக்குக.

(04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

agaram.lk



Scanned with CamScanner